**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 120 -2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : கோவிந்தசாமி | Defence | : |
| Father/Husband Name | : முத்தையன் | Court | : |
| Village | : மருதூர் சிவன்கோவில்தெரு. | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 74/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 09.01.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 16.09.2022 ஆம் தேதி எனது மகன் ரமேஷ் காரைக்காலுக்கு டைல்ஸ் ஒட்டும் வேலைக்கு சென்றுவிட்டு வேலையை முடித்துவிட்டு இரவு 07.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வந்தபோது நல்லாடையிலிருந்து செம்பனார்கோவில் செல்லும் சாலையில் நல்லாடை ஐஸ்வர்யா நகர் அருகே தெற்கிலிருந்து வடக்குநோக்கி வந்துகொண்டிருந்தபோது எனது மகன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கு எதிர் திசையில் வந்த டாடா ஏசிஇ வாகனம் எனது மகனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் எனது மகனுக்கு பின் தலையிலும், காலிலும் அடிப்பட்டு தூக்கி எறியப்பட்டதாக கணேசன் என்பவர் போன் செய்து எனக்கு தகவல் கூறினார். உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தகவல் சொன்னார்கள். நான் உடனடியாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது மகன் மருத்துவமனைக்குசெல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர் என்னிடம் கூறினார். நான் எனது மகனுக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக 17.09.2022 அன்று செம்பனார்கோவில் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **எனது**

**கையெழுத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்தை ஏற்படுத்திய டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் ஆஜர் எதிரி விக்னேஷ் என விசாரித்து தெரிந்துகொண்டேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இந்த விபத்துபற்றிய தகவல் தொலைபேசி மூலம் கிடைத்தபிறகுதான் சம்பவ இடத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். அதனால் விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று என்னால் கூற இயலாது என்றால் சரிதான். விபத்தை ஆஜர் எதிரிதான் ஏற்படுத்தினார் என்று எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் காவல் நிலையம் சென்ற பிறகுதான் தெரிந்துகொண்டேன். இந்த விபத்தானது எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும், எனது மகன் ரமேஷ் அதிவேகமாகவும், அ ஜாக்கிரதையாகவும் வந்ததால்தான் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எனது மகன் காரைக்காலில் வேலையை முடித்துவிட்டு திரும்ப வீட்டிற்கு வரும்போது மது அருந்திவிட்டு கவனக்குறைவாக வந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 120 -2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : கணேசன் | Defence | : |
| Father/Husband Name | : தமிழரசன் | Court | : |
| Village | : பரசலூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 42/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 09.01.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பெயிண்டராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 16.09.22ம் தேதி இரவு 07.45 மணியளவில் ஐஸ்வர்யா நகருக்கு எதிர்திசையில் நின்று எனது நண்பருடன் பேசிக்கொண்டிருந்தேன். காரைக்காலிலிருந்து ரமேஷ் என்பவர் செம்பனாரகோவில் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தார். அவருக்கு எதிர்திசையில் வந்த டாடா ஏசிஇ வாகனமும், இருசக்கர வாகனமும் மோதிக்கொண்டது. படார் என்று சத்தம் கேட்டது. நான் உடனடியாக ஓடிச்சென்று பார்த்தபோது ரமேஷிற்கு பின்தலையிலும் , காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. வாய் மற்றும் மூக்கு வழியாக இரத்தம் வந்தது. டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரை அப்போது நான் பார்க்கவில்லை. அதன் பிறகு நான் விசாரித்ததில் ஆஜர் எதிரி விக்னேஷ்தான் டாடா ஏசிஇ வானத்தை ஓட்டியதாக தெரிந்துகொண்டேன். மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே ரமேஷ் இறந்துவிட்டதாக நான் தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 மற்றும் சிவக்குமார் எனது உறவினர் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்தானது எதிரியின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான்

வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், இறந்த நபர் எனது உறவினர் என்பதால் சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 120 -2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 3 | | Examined as : PW 3 | |
| Name | : சிவக்குமார் | Defence | : |
| Father/Husband Name | : கலியமூர்த்தி | Court | : |
| Village | : அவரைகுளத்து மாரியம்மன்கோவில் தெரு பரசலூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 49/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 09.01.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 16.09.2022 அன்று இரவு 07.45 மணியளவில் செம்பனார்கோவில் கடை வீதியில் நின்றுகொண்டிருந்தபோது கணேஷ் என்பவர் எனக்கு போன் செய்து ரமேஷ் என்பவருக்கு டாடா ஏசிஇ மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது ரமேஷை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்துவிட்டார்கள். நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது ரமேஷ் இறந்துவிட்டதாக கூறினார்கள். டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் ஆஜர் எதிரி விக்னேஷ் என தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவ சமயத்தில் நான் ஐஸ்வர்யா நகரில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது ரமேஷ் என்பவர் நல்லாடை ரோட்டில் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்குநோக்கி வந்துகொண்டிருந்தார் என்றும், அப்போது எதிரி விக்னேஷ் மகேந்திராSubro என்ற வாகனத்தை அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் வடக்கிலிருந்து தெற்குநோக்கி ஓட்டி வந்து ரமேஷ் என்பவர் மீது நேருக்கு நேர் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதில் ரமேஷுக்கு தலையின் பின்புறத்திலும் வலது காலிலும் பலத்த இரத்த காயம் ஏற்பட்டது என்றும், நானும் அக்கம் பக்கம் உள்ளவர்களும் ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு ரமேஷை அனுப்பி வைத்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சம்பவம் பற்றி கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த தேதியை ஆவணத்தின் அடிப்படையில்தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.